தினமலர்
ஞாயிறு ஜூன் 23, 2019



பாளை., சாரதா கல்லூரியில் உலக யோகா தினத்தை முன்னிட்டு யோகா பயிற்சியில் ஈடுபட்ட மாணவிகள்.

# பாளை., சாரதா கல்லூரியில் மாணவிகள் யோகா பயிற்சி

திருநெல்வேலி, ஜூன் 23–

உலக யோகா தினத்தை முன்னிட்டு பாளை., அரியகுளம் சாரதா கல்லூரியில் மாணவிகள் யோகா பயிற்சியில் ஈடுபட்டனர்.

நிகழ்ச்சிக்கு பி.எஸ்சி., கம்ப்யூட்டர் சயின்ஸ் மூன்றாம் ஆண்டு மாணவி சுபாஷினி வரவேற்றார்.

கல்லூரி செயலாளர் யதீஸ்வரி சரவணப்பிரியா அம்பா ஆசியுரை வழங்கினார். முதல்வர் மலர்விழி அறிமுகவுரை ஆற்றினார். இயக்குனர் பேராசிரியர் மேஜர் சந்திரசேகரன் வாழ்த்துரை வழங்கினார்.

மாணவிகள் சுஜிதா, ஜெட்லி யோகா தின சிறப்புரையாற்றினர். உடற்கல்வி இயக்குனர் வித்யா, குமரி மாவட்ட ஆர்.எஸ்.எஸ்., செயலாளர் ராமசங்கரி பேசினர். இறுதியாண்டு மாணவிகள் யோகா செய்து காட்டினர். மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவி ராஜா சந்தியா நன்றி கூறினார்.